RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22241

# சிறு தெய்வ கோட்பாட்டில் ஐம்பேரியற்கை புதினம்

ம. பிரகாஷ். [அ, *]

[அ] தமிழ்த் துறை, யாதவர் கல்லூரி, மதுரை-625007, தமிழ்நாடு, இந்தியா

# Minor Deity Theory in Aimpaeriyarkai Novel

M. Prakash [a, *]

[a] Department of Tamil, Yadava College, Madurai-625007, Tamil Nadu, India

* Corresponding Author: prakashphd0821@gmail.com

Received: 21.09.2022
Revised: 17-11-2022
Accepted: 21-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

After the emergence of cults, religions established their ups and downs. In Tamil culture, minor deity worship has been emerged and developed since ancient times. Worship of minor deity is a special reflection of Tamil culture. Although it seems that worship of minor deities has died out in modern times, there are many works that recreate this worship in the form of new works. In particular, the novel Aimpaeriyarkai list out the features of minor deity worship. When approaching the realist theory as a field, in the contemporary context, the god worship mentioned by the author is a natural worship and the society is centred on the individual as an innovation that gives recognition to the individual. In today's environment the worship of minor deity has become a form of worship which has gone away from the practice. The idea of the author who wants social change is special in it.

**Keywords:** Nature, Religion, Caste, Divine Worship, Agama Worship, Minority

## முன்னுரை

தமிழிலக்கிய உலகில், இலக்கியப் படைப்புகள் பல தோன்றி வந்துள்ளன. இவற்றில் மனித உணர்வுகளின் வெளிப்பாடாக அமையும் இலக்கியவகைப் புதின இலக்கியவகையாகும். புதினத்தின் வழித் தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கும் நோக்கில் பற்பலப் படைப்புகள் தோன்றி வருகின்றன. தமிழரின் வழிபாடு தனிப்பெரும் சிறப்புடையப் பண்பாட்டு அடையாலமாகும். இவ்வாறான வழிபாட்டு முறையில், சிறு தெய்வ வழிபாட்டு முறையானது மனித ஏற்றத்தாழ்வுகளை மறந்து மனிதனை ஒன்றினைக்கும் வழிபாட்டு முறையாக கருதப்படுகின்றன. இதில் இயற்கை வழிபாடு பற்றியத் தகவல்பொதிந்துக் கிடக்கின்றன. ஐம்பேரியற்கை என்னும் இப்புதினத்தில் தமிழரின் வழிபாட்டுமுறைப் பற்றியப் பலச் செய்திகளைக் கூறுகின்றார் ஆசிரியர். ஐம்பேரியற்கையில் இறைவழிபாடனது இயற்கை வழிபாடாக அரும்பி மலர்ந்துள்ளன இது இன்றைய நடைமுறையில் நோக்கும் போது, தற்காலத்தில் வழிபாடும் வழிபாட்டு முறைகளும் மாறிக் கொண்டே வருகின்றன. ஆனால் புதினத்தில் பண்டையக் காலத்தை புதுப்பித்துக் கொண்டு புதினம் பயணிக்கிறது. வழிபாட்டு முறைக்கும் நடைமுறைக்கும் உள்ள வேறுபாட்டின் வழி ஆய்வோம்.

## ஆசிரியரின் காலமும் கருத்தும்

ஐம்பேரியற்கையின் ஆசிரியர் மார்க். இவர் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவர். இவர் பல புதினப் படைப்புகளை வெளியிட்டுள்ளார். அதில் ஐம்பேரியற்கை என்னும் இப்புதினம்

விடுதலைக்குப்பின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் கதை தொடங்குகிறது. இதில் இப்போது உள்ள சமூகப் பிரச்சனை குறிப்பிட்டுள்ளார். இயற்கை மீதான ஆர்வத்தை போற்ற வோண்டும். இயற்கைப் பற்றி பல புதினங்கள் தோன்றி இருந்தலும் இப்புதினம் இயற்கையின் ஆணிவோரை தொட்டு காட்டிய்யுள்ளது.

## தெய்வ வழிபாடு

தமிழரின் தெய்வ வழிபாட்டு முறையினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அது ஆரியர் வருவதற்கு முன்னுள்ள வழிபாட்டு முறை மற்றும் ஆரியர் வருகைக்குப் பின்னுள்ள வழிபாட்டுமுறை என்ற அடிப்படையில் பார்த்தால் ஆரியர்கள் தமிழர்களுடன் கலப்பதற்கு முன் தமிழ்ச்சமூகம் இயற்கையை வழிபடும் சமூகமாக இருந்துள்ளன. ஆரியர் வருகைக்குப் பின் ஆகம வழிபாடாக மாறியுள்ளன இது ஆணின் குறியை அல்லது பெண்ணின் குறியையும் அடிப்படையிலும் நிறுவன அமைப்பினை மையம் விட்டதாகவும் இந்த வழிபாட்டு முறை உள்ளன. இந்த நிறுவன அமைப்பு தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள பல சடங்குகள், சம்பிரதாயங்கள், புராணக்கதைகள் மற்றும் புராணப் பிரசங்கிகள் போன்ற அமைப்பு சார்ந்த வழிபாட்டு முறையை உருவாக்கி உள்ளது

## ஆகம வழிபாட்டிற்கு முன்

பண்டைய தமிழ் சமூகம் ஆரியர் வருகைக்கு முன்னுள்ள வழிபாட்டை இருவகையில் பிரித்துள்ளதாக ஆய்வின் வழி அறியமுடிகிறது. அது 1. தான் பார்த்து பயந்த இயற்கை மீதான நம்பிக்கையும் வழிபாட்டையும் கொண்டிருந்தன. 2. தன்இனக்குழுவை காப்பாற்றுவதற்காக உயிர் தியாகம் செய்த மனிதர்கள் பற்றிய நடுகல் வழிபாடாக அமைந்தது. என்ற இரண்டும், தெய்வ வழிபாடுப் பற்றிய வழிபாட்டு முறையினை கையாண்டுள்ளதற்கு சான்றுகள் உள்ளன. சங்க காலச்சமூகம் இயற்கை மீதான பயத்தையும், இயற்கை மீதான அன்பினையும் சங்க இலக்கியத்தைப் படித்துப் பார்க்கும் போது புறிகிறது. தொல்காப்பியத்தில் போரில் விழுப்புண் பட்டுவீழ்ந்த வீரனுக்கு நடுகல் வைத்து வழிபட்ட வழிபாட்டு முறையினை அறியமுடிகிறது. தமிழ் சமூக வழிபாட்டு முறையில் வடிவமும், குணமும் அவை சார்ந்த இனக்குழுச் சமூகத்தின் தேவைகளையொட்டி அமைந்தவையாக கருத்தப்படுகின்றன. பண்டைய தமிழ்ச்சமூகத்தில் தோன்றிய பல வழிபாடுகளை இலக்கியத் தரவுகளின் வழி அறியமுடிகிறது.

## சிறுதெய்வக் கோட்பாடு

முதன் முதலாக சிறுதெய்வம் என்ற சொல்லாட்சி கி. பி 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாவுக்கரசர்த் தேவாரத்தில் இடம் பெரிகிறது.

“அது சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்” என்ற நாவுக்கரசரின் வரிகள் மூலம் 'சிறுதெய்வம்' என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது. இதனை தொ. பரமசிவனும் பண்பாட்டு அசைவுகள் என்ற நூலிலும் பதிவு செய்துள்ளார் (Paramasivan, 2014).

“உண்மையில் சிறுதெய்வங்கள் எனப்படுவதையே மிகப்பழைய நம்பிக்கையையும் உணர்வுகளையும் பேணி நிற்பவை ஆகும்” (Paramasivan, 2014) என்று தொ. பரமசிவன் கூறுவதன் மூலம் நாம் இதை அறியலாம். ஐம்பேரியற்கையில் இடம்பெறும் வழிபாடும் சிறுதொய்வ வழிபாட்டை முன்வைத்தே இருந்தலும் அது, இயற்கை வழிபாடாக மாறியுள்ளது. இந்தச் சிறுதெய்வ வழிபாட்டில் கோவில் அமைவிடம் பற்றிச் செய்தி இல்லை, உருவமில்லை, பூசாரி இல்லை, சாமியாடி இல்லை, நேர்த்திக்கடன் இல்லை போன்ற சிறுதெய்வ வழிபாட்டிற்கானச் செயல்பாடுகளும் இதில் காணப்படவில்லை. என்றலும், சிறு தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் ஐம்பூதங்களின் வழிபாட்டு முறையினை பார்க்கும் போது இங்கு, இயற்கை வழிபாடு முதன்மையாக பார்க்கப்படுகிறது.

இயற்கை வழிபாட்டில் இருந்து தோன்றியதே இறைவழிபாடு என்ற ஆழமான சிந்தனையும் இதில் வெளிப்படுகிறது.

## ஆகமவழிப்பாட்டிற்கு பின்

பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு அன்னியப் படையெடுப்புகளும் போர்களாலும் நிகழ்ந்தன. இதனால் தமிழ் நிலத்தில் வேற்றுமன்னரின் ஆட்சி நடைபெற்றாது. இதனால் தமிழ்க் கலாச்சாரமும் தமிழ்ப் பண்பாடும் அழிக்கப்பட்டன. தமிழரின் வழிபாட்டு முறையில் பல மாற்றங்கலும் பல புதிய சமயங்களின் தோற்றமும் பெற்றன. பல சமயங்கள் தோன்றினாலும் இதில் கூறிப்பிட வேண்டிய சமயம் ஆகம வழிபாட்டை கொண்டுள்ள வைதிக சமயம். இதுவே, மனிதனை இறை என்ற போர்வையில் பிறப்பினால் ஏற்றத்தாழ்வுகளை ஊக்குவித்தது. இதை பேர்ரசுகளும் ஏற்றுக்கொண்டன. இதிலிருந்தே இறைவழிபாடு தனி மனிதனுக்கானதாக இல்லாமல் மறுக்கப்பட்டது.

“மனிதனைத் தனிமனித நிலைப்படுத்துவது (individualize) வைதிக சமயம் மனிதனை சமூகவயப்படுத்துவது (socialize) நாட்டுப்புறச் சமயம்.” (Natarajan, 2006) என்று வைதிக சமயம் மனிதனை தனி மனிதனாக சித்தரித்து. மனிதனுக்கும் மனித வழிபாட்டிற்குமான உறவினைத்துண்டித்து இருந்தப் போதும் ஆகம வழிபாட்டிலிருந்து தனிமைப்படுத்திக்கொண்ட வழிபாட்டு முறையாக சிறு தெய்வ வழிபாட்டு முறையுள்ளது.

## இறைவழிபாட்டில் ஐம்போரியற்கை

ஐம்பேரியற்கை என்ற சொல்லாட்சி பஞ்சபூதங்கள் என்று அழைக்ககுடிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும். இதனை,

“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்” (Thamizhannal, 2010)

என்ற தொல்காப்பிய நூற்பாவின் வழி ஐம்பேரியற்கைப் பற்றிய குறிப்பினைத் தருகிறார். இதனைத் தொடர்ந்து புறநானூற்றிலும் ஐம்பேரியற்கை பற்றிய சிந்தனை உள்ளது. இது ஐம்பேரியற்கையில்,

“ஐம்பூதம் அறிவோம் ஐம்புல நாள்மகனே

ஒன்றாய் வாழ்வது உயர்பெண் என்போம் போம்”

என்று இப்புதினத்தில் பஞ்சபூதங்கள் என்று அழைக்கக்கூடிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவை வழிபாட்டு கூறிய தொய்வங்களக ஆக்கியுள்ளார். கண்ணுக்குத் தெரியும் இறைவனை விட நம்மை வாழவைக்கக் கூடிய ஐம்பேரியற்கை மேலானது என்றும் இயற்கை வழிபாடனது இயற்கையை மனிதன் உணர்ந்து அனுபவிக்ககுடியதாகவும் தன்னை விட பண்பில் சிறந்தாக இருக்க கூடிய இயற்கையை வணங்குவதாகவும் வழிபடுவதாகவும் இருக்கவேண்டும் என்கிறார் (Marku, 2018).

## ஐம்பூதங்களின் வழிபாட்டுமுறை

### நில வழிபாடு

தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தில் கூட அகப்பொருள் புறப்பொலுள் என்ற இரு பிரிவுவை வைத்தார். அகப்பொருள் பற்றி அவர் கூறும்பொது நிலம் பொழுது என்று இரண்டாகா பிரித்தார். அதில் நிலத்தை முதலில் வைத்து உள்ளார். ஏன் என்றால்? மனித வாழ்விற்கு மட்டுமில்ல அனைத்து உயிரினத்திற்கும் நிலமே அடிப்படை.

“முதலெனப்படுவது நிலம் பொழுது இரண்டின்

இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" (Thamizhannal, 2010)

நிலத்தில் இருந்தே அனைத்து உயிரினமும் தன்னுடைய இருப்பிடத்தை தீர்மானிக்கின்றன. இதனால் நிலத்தை தெய்வமாக வழிபடுகின்றனர். நாவலில் இதனை, மண்ணை மதிக்கணும். மண்ணை வாழ்த்தணும். மண்ணை வணங்கணும். மண்ணோடு உறவா இருக்கணும். மண்ணோடு நமக்கிருக்கும் உறவைப் புதுப்பிக்கிற வித்ததுல இந்த மண்ணோட ஒன்றி இருக்கிறமாதிரி வணங்குவோம்".

மனிதர்கள் மட்டும் மண்ணாகிய நிலத்தை மதிப்பதில்லை அதற்கும் நமக்குமான உறவையும் புரிந்து கொள்ள நினைப்பது கூடயில்லை என்ற மண்ணை மறந்த மணித சமுகத்திற்கு மீண்டும் நினைவுட்டவே சொய்கிறது. அதோடு, "உடலின் ஒவ்வொரு பகுதியும் மண்ணுல படும்படி இடவலமா மெதுவா உருளுங்க. படுத்தபடியே கூறினார் பெரியவர்."

ஐம்பூதங்களுக்கும் அதன் தன்மையை பொறுத்து அதற்கு ஒரு நிறத்தையும் நிர்ணயிக்கின்றனர். நிலம் கருப்பு நிறத்தை கொண்டு இறைவனை வழிபடுகின்றனர். நாவலில் இதனை, "பறை அடித்த படியே கருப்பு பனியன் அணிந்திருந்த பெண் பனை மரங்களை நோக்கிசொன்ற வழிபட்டனர்." பனைமரம் மண்ணுடன் கொண்டுள்ள உறவானது நீண்டதும் நெருக்கமானதும் ஆகும். இவ்வாறு நில வழிபாட்டினை மேன்மைப்படுத்தியுள்ளார்.

## நீர் வழிபாடு

நீரானது அனைத்து உயிரினத்திற்கும் இன்றியமையாதது. இதனையே வள்ளுவரும் 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளார்

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

பசும்புல் தலைகாண் பரிது." (Puliyur Kesigan, 2009)

என்ற வரிகள் நீரின் தேவையினை நன்கு உணர்த்துகின்றன. இதில் ஓர் அறிவு உயிரினமாகிய புல்லினது தனையைக் கூட காண்டல் அரிது. நீரின் சிறப்பை இதைவிட யாரும் விளக்கிவிட முடியாது. இதனை நாவலில் "குளத்து நீரில் மெதுவாக இறங்கவும் நீரின் குளுமையை உணர்ந்து பாதம் சிலிர்த்தது ஒருசில நொடிகள். பின் மெதுவாக முன்னேறினர். நீந்தவில்லை. கால், தொடை, வயிறு, நெஞ்சு, கழுத்து. ஆழமான பகுதிக்குச் சென்றனர். பின் நீரில் மூச்சை அடக்கி மூழ்கினர். நீர் உறவில் கலந்தனர்" என்று, நீரினை எவ்வாறு பொற்றவேண்டும் வணங்க வேண்டும் என்று வள்ளுவரை விட நீரின் பேருமையை முன்மொழிகின்றார். "அனைவரும் நெல்லிமரங்களுக்கு முன்பு கூடினர். நீர்த் தாத்தாவையும், நீர்ப் பாட்டியையும் நினைத்தனர். பணியாளர்களது மலர் அஞ்சலியும், படையலும் முடிந்ததும் அனைவரும் மரியாதையுடன் வணங்கினர்".

இதுவே, இறைத் தொண்டாக இருக்கமுடியும் என்று நினைக்கிறார்கள். இவர்கள் நீரை இந்த இனக்குழுவின் மூதாதையர்கள் என்று கருதுகின்றனர். இவர்கள் நீர் ஆகிய இறைவனை வணங்குகின்றனர்.

"நீரோடு உறவுள்ளவன் நீடு வாழ்வான். நீரோடு நமக்கிருக்கும் உறவை நாம புதுப்பிக்கணும். வளர்க்கணும்." நீரினை உறவினராக நினைக்க வேண்டும். நீருக்கும் மனிதனுக்குமான நெருங்கிய உறவு புனிதமானது. இதை இறை சிந்தையிடன் மதித்து வணங்கியிள்ளது. இதன் வழியாக வொளிப்பிடுகிறது.

## நெருப்பு வழிபாடு

தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் நிலவினை போற்றும் விதமாக தனது முதலடியை அமைத்துள்ளார்.

"திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!" (Srichandran, 2013)

என்ற முதல்வரி இயற்கைக்கு அவர் தரும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. இதில் நிலவினை குளிர்ச்சி பொருந்தியதாக கருதியுள்ளார். நாவலில் நிலவினை நெருப்புக்கு ஒத்த பொருளாக கூறியுள்ளார். இதில் நிலவொளியினை சுடும் தன்மை கொண்ட இயற்கை சக்தியாக ஆசிரியர் பார்க்கிறார். அதோடு நிலவினை இரசித்து அனுபவித்து உட்கிரகிக்க வேண்டும் என்கிறார்.

"நிலவொளி தங்களது உடலில் முழுவதும் விழுமாறு அனைவரும் சற்று இடைவெளி விட்டு நின்றனர்". தன்னுடலில் நிலவின் வெப்பக்குளுமையை மெல்லமெல்ல நுழைந்து தன்னிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதை உணர்ந்தார். அந்த மாற்றம் ஒளியின்மீது, அதனால் உருவாகும் வெப்பத்தின்மீது உறவாக உள்ளத்தில் மலர்வதை உணர்ந்தார். கல்வி பணியாளர் சிவப்பு வாடாமல்லி மாலையை கொடுக்காய் மரத்தடியில் வைத்து பணிவோடு வணங்கினார்.

## காற்று வழிபாடு

தமிழ் இலக்கிய உலகில் காற்றினை நன்கு உணர்ந்தவர்களாக சித்தர்கள் விளங்குகின்றனர். இதை திருமூலர்,

"பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவந்

தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்"

என்ற வரிகள் பூவின் மொட்டுக்குள் இருக்கும் மணத்தை அந்த மொட்டு விரியும் தருவாயில் வெளியிலுள்ள காற்று உள்ளே சென்று அந்த மணத்தை வெளியே கொண்டு வந்து மணம் பரவச் செய்யும்.

பூவின் மணத்தைக் கொண்டே ஒவ்வொர் உயிரினமும் தனக்கன இனத்தை பொருக்கிகொண்டு இருக்கின்றன. இதையே, திருமுலர் கூறிச் சொன்றுள்ளார். இதன் அடிப்படையிலே அனைத்து உயிரினமும் தனது இருப்பை நிலைநிறுத்தி வளர்ந்து வருக்கின்றன. மனித இனத்திற்கும் காற்றே அடிப்படை என்பதை மனித சமுகம் மறந்து வருகின்றது. இதை உணர்ந்து காற்றை வழிபடும் விதமாக இயற்கையை மிட்டுருவாக்கம் சொய்துள்ளாராசிரியர்.

"காற்றுத் தாத்தா, காற்று பாட்டின்னு அழைக்கிறோம். ரெண்டு பேரும் விளாமரமா நம்மோடு வாழ்றாங்க". பறை முழக்கத்துடன் பெரியவர் அடுத்து இருந்த விழா மரங்களை நோக்கி செல்ல மக்களும் பின்தொடர்ந்தனர்

## வாணம் வழிபாடும் முறை

வெளி என்பது வெறுமை என்பதால் அனைப்பற்றிப் புரிந்துக் கொள்வதும் அதைப்பற்றி விளக்குவதும் கடினமானது. "பஞ்ச பூதங்கல்ல வெளியைத் தவிர மற்றவையோடு நமக்கு பரிச்சயம் இருக்கு. வெளிங்கிறத முழுசும் புரிஞ்சுக்கிற முடியுமா? தெரியல. வெளின்னா வெறுமை. ஒன்னும் இல்லாமை. ஒண்ணும் இல்லாததை நேசிக்கணும் உறவுடன் இருக்கணுங்கிறதை உணர்வது ரொம்பக் கடினம் தான்". வானம் வெளி வெறுமை சூனியம் அதன் நிறம் கருநீலம் கருநீல பழம் நாவல் அதை கொடுக்கும் நாவல் மரத்தை நடுங்கள் சொன்னாங்க நாங்க நட்டோம். இயற்கையையும் அது வழங்கிய வளங்களையும் நினைக்கிற பொழுது, அதோடு இயற்கையோடு இணைந்த நமது முன்னோர்களையும், அவர்களது தியாகங்களையும் ஒற்றுமையோடு இனைந்து வணங்குவோம்.

## முடிவுரை

இயற்கை என்னும் புதினம் சமூக கட்டமைப்பில் இருந்து விலகி நின்று தனக்கான சமூக கட்டமைப்பை நிறுவி உள்ளது இதில் மனிதனால் மற்றவருக்கு தீங்கு செய்யாமல் வாழ்ந்தால் என்ன நன்மை பயக்கும் அதனூடே மனிதத்தையும் இயற்கையும் இணைந்து போற்றவேண்டும். இதுவே முரண்பாடான கதைப் போக்கை கொண்டுள்ளதாக தோன்றுகிறது இந்நாவலின் மையமாக இயற்கையை

காப்பாற்றுவதாகவும் இயற்கையை போற்றுவதாகவும் அமைந்துள்ளது. இயற்கையை போற்றுவது சிறு தெய்வ வழிபாட்டில் ஒரு கூறாக இருந்தாலும் இங்கு சிறுதெய்வ வழிபாடு பற்றி கூறப்படும் செய்திகள் சிறு தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய வனாக உள்ளது. இது இன்றைய காலத்திற்கு ஏற்புடையதா என்ற கருத்து பின்புலத்தில் பார்த்தால் இல்லை என்றே கூறவேண்டும்.

## References


Marku, (2018) Aimperiyarkai, Tamilini Publications, Chennai, India.

Natarajan, T.S. (2006) Tamilin Panpaattu Veligal, New Century Book house, Chennai, India

Paramasivan, T. (2014) Panpattu Asaivukal, Kalachuvadu Publications, Nagercoil, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Srichandran, J., (2013), Silapathikaram - Source and text, First Edition, Tamil Nilayam, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License